

கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் சட்டமன்ற தொகுதி கல்வராயன் மலையில் நடைபெற்ற அரசு விழாவில் அமைச்சர் எ.வ.வேலு கலந்து கொண்டு ரூ. 1.91 கோடி மதிப்பில் 1082 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார், அருகில் வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட கழக செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ, வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ, மாவட்ட ஆட்சியர் எம்.எஸ்.பிரசாந்த், தே.மலையரசன் எம்.பி. மற்றும் பலர் உடன் உள்ளனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா நிறைவையொட்டி நடைபெற்ற விழாவில் திருக்கோவிலூர் நகர மன்ற உறுப்பினர் டி.பூபதி ஏற்பாட்டில் திருக்விகோவிலூரில் விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் டாக்டர்.பொன். கௌதமசிகாமணி தலைமை வகித்தார். நிகழ்ச்சியில் உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி கலந்து கொண்டு இலவச ஆம்புலன்ஸ், 1000 நபர்களுக்கு, தையல் இயந்திரம், சலவைப் பெட்டி, விளையாட்டு உபகரணங்கள் மற்றும் மகளிர்களுக்கு வீட்டு உபயோகப் பொருட்களை வழங்கினார். சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செ.புஷ்பராஜ், திருக்கோவிலூர் நகர மன்றத் தலைவர் டி என் முருகன், மாவட்ட ஊராட்சி குழுத் துணை தலைவர் மு தங்கம் , தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.செல்வராஜ், நகரச் செயலாளர் கோபிகிருஷ்ணன், ஒன்றிய செயலாளர்கள் ஜி.ரவிச்சந்திரன், அ.சா.ஏ. பிரபு, பி.வி.ஆர் விஸ்வநாதன், பிரேமா அல்போன்ஸ், பேரூராட்சி மன்றத் தலைவர் ராயல் எஸ்.அன்பு, பேரூர் செயலாளர் சுந்தரமூர்த்தி, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் எம்.ஆர்.இராஜிவ்காந்தி, ஒன்றிய குழுத் தலைவர் தனலட்சுமி உமேஸ்வரன், துணைத் தலைவர் குணா உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

### நாடாளுமன்ற பொதுக் கணக்குக் குழுவில்

# டி.ஆர்.பாலு - திருச்சி சிவா இடம் பெற்றுள்ளனர்!

## செபி செயல்பாடுகள் குறித்து குழு விசாரணை!

புதுடெல்லி, செப். 8 -

செபி செயல்பாடுகள் குறித்து விசாரணை நடத்த நாடாளுமன்ற பொது கணக்குக்குழு முடிவு செய்துள்ளது.

இதனிடையே, செபி தலைவர் மாதவியை நேரில் அழைத்து விசாரிக்க இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

நாடாளுமன்ற பொது கணக்குக் குழுவின் தலைவராக காங்கிரஸ் உறுப்பினர் கே.சி. வேணுகோபால் அண்மையில் நியமிக்கப் பட்டார்.

அதன் இரண்டாவது கூட்டம் விரைவில் நடைபெற உள்ளது.

அந்தக் கூட்டத்தில்





செபி மீதான புகார் குறித்தும், செபியின் செயல்பாடுகள் குறித்தும் விவாதிக்க முடிவு செய்யப் பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

அதானி செபி ஊழல் தொடர்பாக நாடாளு மன்ற கூட்டுக்குழு விசாரணை நடத்த வேண்டும் என்று காங்கிரஸ் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

இந்நிலையில், நாடாளு மன்ற பொதுக்கணக்கு குழு செபி விவகாரங்கள் தொடர்பாக விசாரணை நடத்த முடிவு செய்துள்ளது. 22 உறுப்பினர்கள் கொண்ட பொதுக் கணக்கு குழுவில் 15 மக்களவை உறுப்பினர்கள், 7 மாநிலங்களவை உறுப்பினர்கள் இடம்பெற்றுள்ளனர்.

மக்களவை தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர். பாலு, மாநிலங்களவை தி.மு.க. குழு தலைவர் திருச்சி சிவா, திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் சௌகதா ராய், சுகேந்து சேகர் ராய், சமாஜ்வாதி கட்சியின் தர்மேந்திர யாதவ் உள்ளிட்டோர் இக்குழுவில் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

### கள்ளக்குறிச்சி ஒன்றிய குழு பெருந்தலைவர்

# அலமேலு ஆறுமுகம் இல்லத் திருமண விழா!

## அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நடைபெற்றது

கள்ளக்குறிச்சி, செப். 8-

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக துணை செயலாளர் வாணியந்தல் ஆறுமுகம், கள்ளக்குறிச்சி ஒன்றிய குழு பெருந்தலைவர் அலமேலு - ஆறுமுகம் தம்பதியின் மகள் சந்தியாவுக்கும், அகரக்கோட்டாலத்தை சேர்ந்த முருகேசன்-தனம் தம்பதியின் மகன் பாலாஜிக்கும் (கிராம நிர்வாக அலுவலர்) கள்ளக்குறிச்சி அடுத்த மாடூர் ஏ.என்.பி. திருமண மஹாலில் திருமணம் நடைபெற்றது,

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறை முகங்கள் அமைச்சர் எ.வ.வேலு கலந்து கொண்டு தலைமை தாங்கி திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார்.

இதன் பின்னர் அமைச்சர் பேசுகையில், மணமக்கள் ஒருவரை ஒருவரை நன்றாக புரிந்து கொண்டால் தான் வாழ்க்கை மிகச் சிறப்பாக இருக்கும்,நீ பெரிய ஆளு,நான் பெரிய ஆளு என்கிற போட்டி மனப்பான்மை இல்லாமல் ஒருவரை ஒருவர் விட்டுக் கொடுத்து வாழ்ந்தால் குடும்பம் மிகச் சிறப்பான முறையில் அமையும், மேலும் இளைய சமூகத்தினர் பெரியார்,அண்ணா, கலைஞர் அவர்களை பற்றி படித்தாலே அனைத்து கல்வி அறிவும் நமக்கு கிடைத்துவிடும்,

தமிழகத்தில் திராவிட மாடல் ஆட்சி நடத்திவரும் நமது முதல்வர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எல்லோருக்கும் எல்லாம் கிடைத்திட வேண்டும் என்று 24 மணி நேரமும் மக்களுக்காகவே அயராது உழைத்துக் கொண்டு வருகிறார், தற்போது கூட நமது முதல்வர் தமிழகத்தின் வளர்ச்சிக்காக அமெரிக்கா சென்று தொழில் முதலீட்டாளர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்டு வருகிறார் என்று பேசினார்.

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ வரவேற்றார்,

தெற்கு மாவட்ட கழக செயலாளர் வசந்தம் க. கார்த்திகேயன் எம்.எல்.ஏ, மாவட்ட ஆட்சித் தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், தே. மலையரசன் எம்.பி. மாநில மகளிர் அணி துணை செயலாளர் ஆ.அங்கையற்கன்னி,

மாவட்ட திட்ட இயக்குனர் ரமேஷ் குமார் முன்னிலை வகித்து மணமக்களை வாழ்த்தினார்கள்.

திருமண விழாவில் தெற்கு மாவட்ட கழக அவைத்தலைவர் ராமமூர்த்தி, மாவட்ட கழக துணை செயலாளர் காமராஜ், கள்ளக்குறிச்சி நகர செயலாளர் சுப்ராயலு, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் பரமேஸ்வரி பெருமாள்,ஒன்றிய கழக செயலாளர்கள் ஆறுமுகம்,

வெங்கடாசலம், வைத்தியநாதன், அன்புமணி மாறன், வசந்தவேல், கிருஷ்ணன்,

சின்னதம்பி,பேரூர் கழக செயலாளர்கள் துரைதாகப் பிள்ளை, செந்தில்குமார் ஜெயவேல், தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தாக பிள்ளை,வடக்கு மாவட்ட இளைஞரணி துணை மாவட்ட துணை அமைப்பாளர் அருள் ஊராட்சி மன்ற தலைவர்களின் கூட்டமைப்பு தலைவர் ஜெய் சங்கர் மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், அரசியல் கட்சி பிரமுகர்கள்,

தொழிலதிபர்கள், அரசு அதிகாரிகள், கிராம ஊராட்சி செயலர்கள், மாநில மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள், மணமக்களின் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் உள்பட பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர். திருமண நிகழ்ச்சியின் முடிவில் கள்ளக்குறிச்சி வடக்கு ஒன்றிய கழக செயலாளர் வழக்கறிஞர் எஸ்.பி.அரவிந்தன் நன்றி கூறினார்.

# வக்பு வாரிய மசோதா ஆய்வில் எதிர்க்கட்சிகள் கருத்துக் கூற வாய்ப்பு மறுப்பு!

## விவரத்தை ஒன்றிய அரசு மறைத்துள்ளது – ஆ.ராசா குற்றச்சாட்டு!

புதுடெல்லி, செப். 8 -

நாடாளுமன்றக் கூட்டுக்குழுவில் கருத்துக்களை தெரிவிக்க வாய்ப்பளிக்காமல் வக்பு வாரிய மசோதா அவசர கதியில் ஆய்வு செய்யப்படுவதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

நாடாளுமன்றத்தில் ஒன்றிய அரசு தாக்கல் செய்த வக்பு வாரிய மசோதாவுக்கு கடும் எதிர்ப்பு எழுந்ததை தொடர்ந்து இரு அவைகளின் கூட்டுக்குழுவுக்கு பரிந்



துரை செய்யப்பட்டது.

இந்த குழுவின் மூன்றாவது கூட்டம் அதன் தலைவர் ஜெகதாம்பிகா பால் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் பேசிய திமுக மக்களவை கொறடா ஆ.ராசா, வக்பு சட்டம் ஆங்கிலேயர் ஆட்சியின் போது 1913 ஆம் ஆண்டு முதல் அமலில் உள்ளதாக குறிப்பிட்டார். இந்த விவரத்தை அரசு மறைத்துள்ளதாகவும் சுட்டிக்காட்டினார். மேலும், இந்த கூட்டத்தில் எதிர்க்கட்சிகள் தங்களது கருத்துக்களை தெரிவிக்க போதிய வாய்ப்பு வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

மசூதிகள் மீதான உரிமம் 17 ஆம் நூற்றாண்டு முதல் உள்ளதாகவும், அரசு முன்வைக்கும் ஆவணங்களை படித்து அதன் மீது கருத்துக் கூற தங்களுக்கு போதிய வாய்ப்பு அளிக்கப்படவில்லை என்றும் இந்தியா கூட்டணி கட்சிகள் புகார் தெரிவித்தன.

இந்த போக்கு தொடர்ந்தால் சபாநாயகரை சந்தித்து புகார் தெரிவிக்கப்படும் என்றும் கூறியுள்ளனர்.

### சிப்காட், அத்திக்கடவு - அவிநாசி

# சோலார் - சத்தி பேருந்து நிலையம் தொடர்பாக ஆய்வுக் கூட்டம்!

## அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில் நடைபெற்றது!

ஈரோடு,செப்.8-

ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் நேற்று முன்தினம் (06.09.2024) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில், சிப்காட், அத்திக்கடவு அவிநாசி திட்டம்; சோலார் மற்றும் சத்தி பேருந்து நிலையம் தொடர்பாக சம்பந்தப்பட்ட துறை உயர் அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

ஈரோடு மாவட்டத்தில் 06.09.2024 அன்று கால் நடைகளுக்கு மருத்துவ சிகிச்சை அளிப்பதற்காக 7 நடமாடும் கால்நடை சிகிச்சை வாகனங்கள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. அதிலே ஒரு வாகனத்திற்கு மருந்துகள், பணியாளர் ஊதியம், தொலைபேசி கட்டணம், எரிபொருள் மற்றும் இதர செலவினங்களுக்காக ஒரு மாதத்திற்கு ரூ.1.63 இலட்சம் வீதம் 7 வண்டிகளுக்கு ரூ.11.41 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்த கால்நடைகளுக்கு மருந்து மற்ற வசதிகள் செய்வதற்காக இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல ஊரக வளர்ச்சி துறையில் அலுவலர்கள் பயன்பாட்டிற்கு 14 வாகனங்கள் இன்றைய தினம் ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. எனவே இந்த 21 வாகனங்கள் அதற்கான மொத்த மதிப்பு ரூ.2.23 கோடி ஆகும்.

அதேபோல், சாயப்பட்டறை, சிப்காட், அத்திக்கடவு அவிநாசி திட்டம், சோலார் பேருந்து நிலையம் மற்றும் சத்தி பேருந்து நிலையம் தொடர்பாக சம்பந்தப்பட்ட துறை உயர் அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதில், அத்திக்கடவு அவனாசி திட்டத்தின் செயல்பாடுகள் தொடர்பாகவும், தண்ணீர் தடையின்றி செல்வதற்கும், அனைத்து குளங்களையும் நிரப்புவதற்கும் தொடர்புடைய துறை அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு, கருத்துகள் கேட்கப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அத்திக்கடவு-அவினாசி திட்டத்தினை திறந்து வைத்தது முதல் இன்று வரை 21 நாட்களில், 10 நாள் தண்ணீர் வழங்கப்பட்டுள்ளது. மொத்தமாக உள்ள 1045 குளங்களில் 746 குளங்களுக்கு தண்ணீர் சேர்ந்துள்ளது. தண்ணீர வர வர மற்ற குளங்களுக்கும் போய் சேருவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மீதமுள்ள 299 குளங்களுக்கும் தண்ணீர் நிரப்புதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. சில இடங்களிலே அந்த தண்ணீர் கசிவு இருக்கிறது. தண்ணீர் கசிவு சரிசெய்யும் பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

தண்ணீர் 70 நாள் கொடுக்க வேண்டும் என்று திட்டம் இருக்கிறது. அந்த 70 நாள் கொடுக்கிற பொழுது இந்த 1045 குளங்களும் நிரப்பப்படுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. எனவே, அதை கொடுத்து விட முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். எல்.பி.பி. வாய்க்காலில் தண்ணீர் விடப்பட்டுள்ள காரணத்தால், அதனுடைய உபரிநீர் மற்றும் அதனோடு மழையும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த தண்ணீர் கிடைக்கின்ற பொழுது முழுமையாக அதை நாம் பயன்படுத்த முடியும்.

தொடர்ந்து, சாய கழிவுகள் தொடர்பாக ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. எந்த காரணத்தை கொண்டும் சாயக்கழிவு நீரினை சுத்திகரிக்காமல் திறந்து விடக்கூடாது. அவ்வாறு விட்டால் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பது ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் மூலம் புகார் அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டு இணைப்பு துண்டிக்க ப்பட்டுள்ளது. இன்றைக்கும் அது தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சங்க நிர்வாகிகளும்; ஒத்துழைப்பு வழங்குவதாக தெரிவித்துள்ளார்கள். மேலும் தற்காலிகமாவும், உடனடியாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

நிரந்தரமான தீர்வு குறித்தும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடன் ஆலோசனை மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அதேபோல் சிப்காட் தொடர்பாக ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. சுத்திகரிப்பு நிலையம் புதிதாக அமைப்பதற்கான ஒப்பந்தம் கோரப்பட்டு, கிடைக்கப்பெற்றவுடன் விரைவில் பணிகள் துவங்கப்படவுள்ளது. இப்பணிகள் நிறைவடையும் பொழுது சாயக்கழிவு தொடர்பாக முழுமையான தீர்வு கிடைக்கப்பெறும். சோலார் பேருந்து நிலையம் பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகள் நிறைவு பெற்றவுடன் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். அதேபோல் சத்தியமங்கலத்திலும் ஒரு பேருந்து நிலையம் அமைப்பதற்கான பணிகள் நடைபெறும் என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) ரெ.சதீஸ் உதவி ஆட்சியர் (பயிற்சி) ராமகிருஷ்ணசாமி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் திரு.முஹம்மது குதுரத்துல்லா (பொது), செல்வி.பிரேமலதா (நிலம்), வருவாய் கோட்டாட்சியர்கள் சதீஷ்குமார் (ஈரோடு), கண்ணப்பன் (கோபிசெட்டிபாளையம்) உட்பட தொடர்புடைய துறை அலுவலர்கள், சாய, சலவை பட்டறை நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற தொகுதி கல்லாக்கோட்டையில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் அரசு மேல்நிலைப் பள்ளியில் பயின்று நீட் தேர்வில் தேர்ச்சி பெற்று 7.5% இடஒதுக்கீடு மூலம் மருத்துவம் பயில இடம் பெற்ற மாணவிகள் டி. யுவதிகா அரசு மருத்துவக் கல்லூரி நீலகிரி, எம். ராகவி ஆர்.வி.எஸ் பல் மருத்துவக் கல்லூரி கோவை, எம். அபிநயா, அரசு மருத்துவக் கல்லூரி புதுக்கோட்டை, ஆர். பவித்ரா, மாதா பல் மருத்துவக் கல்லூரி குன்றத்தூர் உள்ளிட்ட ஏழு மாணவிகளையும் பாராட்டி, வரும் காலங்களில் சிறப்பாக மருத்துவக் கல்வியில் தேர்ச்சி அடைந்து பொதுமக்களுக்கு சேவையாற்றிட வாழ்த்துகள் தெரிவித்து நிதி உதவி வழங்கி பாராட்டினார். இந்நிகழ்வுகளில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அப்தாப் ரசூல் , கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை , மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் ஜெயலட்சுமி தமிழ்ச்செல்வன், வெள்ளாள விடுதி ஊராட்சி மன்றத் தலைவர் எம்.பரமசிவம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி வட்டாரம், MM 278 அரசமலை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின்கீழ், காரையூரில் புதிய அங்காடி கிளையினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 03.09.2024 அன்று திறந்து வைத்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் (பொ) திருமதி.ஆர்.ரம்யாதேவி, இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.தெய்வநாயகி, பொன்னமராவதி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.சுதா அடைக்கலமணி, பொன்னமராவதி பேரூராட்சித் தலைவர் திருமதி.சுந்தரி அழகப்பன், கூட்டுறவு சார்பதிவாளர்/ செயலாட்சியர் சுப்பிரமணியன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.